# ஒருங்கிணைந்த பண்ணையம்

– சிறுகக் கட்டிப் பெருக வாழ்.



கோவை வணிகம்

ம.கோபிநீலன்

# ஒருங்கிணைந்த பண்ணையம்

– சிறுகக் கட்டிப் பெருக வாழ்

கோவை வணிகம் வெளியீடு
31-B, போகையன் லே அவுட், காரமடை ரோடு,
மேட்டுப்பாளையம் – 641 301. கோவை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| நூல் | : | ஒருங்கிணைந்த பண்ணையம் |
| நூல் ஆசிரியர் | : | ம. கோபிநீலன் |
| ஆசிரியர் | : | புலவர் தாச. அரங்கசாமி M.A., M.Ed., |
| முதல் பதிப்பு | : | ஜுலை 2017 |
| வெளியீடு | : | கோவை வணிகம் வெளியீடு<br>31-B, போகையன் லே அவுட், காரமடை ரோடு,<br>மேட்டுப்பாளையம் – 641301,<br>கோவை மாவட்டம். |
| அச்சகம் | : | தன்னம்பிக்கை ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>எண் 10, சாஸ்திரி வீதி எண் 1,<br>பி.ன். புதூர், கோயம்புத்தூர் – 641041. |
| பக்கங்கள் | : | 68 |
| விலை | : | ரூ. 110/- |

# ஆசிரியர் உரை

“பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்” – பாரதியார்.

இப்பல கல்வியில் வேளாண்மை ஒன்று. மற்ற தொழில்களின் வளர்ச்சியை நோக்க வேளாண்மைத் தொழில் போட்டி போட்டு, மற்ற தொழில்கள் செய்பவர் அளவு பொருளீட்டுதல், உயர் மதிப்புப் பெறுதல் ஆகியவற்றை அடைய முடிவதில்லை.

அரசு பல்வேறு உதவிகள் செய்தும் அவை பாலை வனத்தில் பாய்ச்சிய நீராயின. ஆனால், தற்பொழுது, விவசாயக் குடியிலிருந்து, படித்த பல்வேறு படிப்புப் பட்டதாரிகள் தம் பரம்பரை வேளாண் தொழிலில் ஈடுபட்டுப் பல்வேறு ஆய்வுகள், உற்பத்திப் பெருக்கம், சந்தைப்படுத்துதல் ஆகியவைகளைச் செய்து வேளாண் விழிப்புணர்ச்சி ஊட்டுகின்றனர். அதன் கூட்டுத் தொழில்களின் ஒன்றிணைப்பே “ஒருங்கிணைந்த பண்ணையம்” என்ற இச்சிறு புத்தகம். இது “கோவை வணிகத்தின்” இரண்டாவது புத்தகமாக வெளியிடப்படுகிறது. இது வேளாண் பெருமக்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய, ஒன்று, கடைப்பிடிக்க வேண்டிய புத்தகமாகும்.

இப்புத்தகத்தில் முதலில் செய்வதனுடைய பலனைக் காசாகப் பார்க்க வேண்டும் என்ற நிலையை எடுத்துக்காட்ட ‘ஒருங்கிணைந்த பண்ணையம்; சிறுகக் கட்டிப் பெருக வாழ்’ என்ற தலைப்பிட்டுப் பொருள் சேர்க்கும் திறனை நமக்கு அறிவுறுத்துகிறது. அதன் பின் வரும், அதன் சார்புத் தொழில்களான, வெள்ளாடு வளர்ப்பு, செம்மறியாடு வளர்ப்பு, நாட்டுக் கோழி, வாத்து, வான்கோழி, முயல் ஆகியவற்றின் வளர்ப்பு முறைகளும், காப்பு முறைகளும், நாள்தோறும் வருவாய் வரும், (காசு பார்க்கும்) முறைகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மேலும், மண்புழு, மண்புழு உரம், கூட்டுப் பண்ணை – கலப்பு எரு ஆகியவற்றிற்குரிய வழிமுறைகளை நன்கு எடுத்துக் கூறுகின்றன. பல்வேறு விலங்கு, பறவைகளின் கூட்டு எருவின் சிறப்பு, பலன், வரும்படி ஆகியவை எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இது, மற்ற தொழில் செய்பவரைப்போலவே, விவசாயிகளும் எல்லா நலன்களும் உயர்வும் பெற்று வாழ முடியும் என்பது உறுதி செய்யப்படுகிறது. பண்டையக்கால முதலே, எல்லா விலங்கு, பறவைகளை வைத்து வேளாளர் உயர்ந்து வாழ்ந்தனர் என்பது சங்க நூலாகிய ‘பெரும் பாணாற்றுப் படை’ யில்

“வேளாளர் இல்லம் சென்றால் சம்பா அரிசிச் சோறு கோழிக் கறியுடன் கிடைக்கும்” என்று கூறப்பட்டுள்ளதன் மூலம், ஒருங்கிணைந்த பண்ணையமும் – விருந்தோம்பும் முறையும் அறிந்து நாமும் கடைப் பிடிக்கலாம். இதைத்தான் பாரதியார் பாப்பாப் பாட்டின் மூலம்,

“வன்னப் பறவைகளைக் கண்டு – நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.
கொத்தித் திரியுமந்தக் கோழி – அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திரியுமந்தக் காக்காய் – அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்து தரும், பாப்பா! – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா;
வாலைக் குழைந்துவரும் நாய்தான் – அது
மனிதருக்குத் தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும் நல்ல குதிரை – நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு – இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!”
– என்று அறிவுறுத்திய பின் தான்

“காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!”

என்று முன் தொழில், பின் படிப்பு என்று குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்க்க அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு, நாம் ‘ஒருங்கிணைந்த பண்ணையம்’ செய்து, நிரந்தர வருமானம் ஈட்டி, வள்ளுவர் கூறுவது போல

“சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை”

என்பதற்கொப்ப வாழலாம்; பிறரையும் வாழ வைக்கலாம்.

# உள்ளே...


| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பண்ணையம் – வருமானம் | 1 |
| 2. | வெள்ளாடு வளர்ப்பு – பண்ணைக்குள் மேய்ச்சல் முறை | 9 |
| 3. | நாட்டுக் கோழி வளர்ப்பு – வெற்றிக் கூட்டணி | 18 |
| 4. | செம்மறி ஆடு வளர்ப்பு – மேய்ச்சல் முறை | 23 |
| 5. | மண்புழு உரம் – தயாரிக்கும் முறை | 30 |
| 6. | கூட்டுக் கலப்புப் பண்ணை – நாட்டு மாடு, வாத்து, பன்றி... | 34 |
| 7. | வாத்து வளர்க்கலாம் வாங்க – புறக்கடை வளர்ப்பு | 41 |
| 8. | வெள்ளாடு – செல்வந்தர்களுக்கும் பசு | 44 |
| 9. | ஒருங்கிணைந்த பண்ணையம் – நிரந்தர வருமானம் | 61 |

இந்நூலில் வெள்ளாடு (பண்ணைக்குள் மேய்ச்சல் முறை, கொட்டில் முறை வளர்ப்பு), செம்மறி ஆடு, நாட்டுக்கோழி, வாத்து, மண்புழு மற்றும் மண்புழு உர உற்பத்தி, ஒருங்கிணைந்த பண்ணையம்... போன்று பத்து பல்வேறு தலைப்புகளில் பண்ணையாளர்களின் அனுபவங்கள், வேளாண் மற்றும் கால்நடைத் துறை விஞ்ஞானிகளிடமிருந்தும் தகவல்கள் சேகரித்து வழங்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லின் இயற்கை விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணை முறையைச் சிறுகக் கட்டினால், பெருக வாழலாம்.


கோவை வணிகம்

2012

31/BA, போகையன் லேஅவுட்,
மேட்டுப்பாளையம் நூலகம் அருகில்,
கோவை ரோடு, மேட்டுப்பாளையம் - 641301,
கோவை மாவட்டம்.

தொடர்புக்கு
7598311599

விலை
ரூ. 110/-

ISBN : 978-81-934417-0-1